4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) பிப்ரவரி 24 ஆம் தேதியை மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளாக அனுசரித்தல் மற்றும் ஆதரவற்ற பெண் குழந்தைகளின் நல்வாழ்விற்கான ஐந்து புதிய திட்டங்களைச் செயல்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள்மீது மிகுந்த பற்றும், மாறாத அன்பும்கொண்டு, குழந்தைகளைக் காணும்போதெல்லாம் அவர்களை உச்சி முகர்ந்து வாழ்த்தி மகிழும் தாயுள்ளம் கொண்டவர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, பெண் குழந்தைகளின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்து, அவர்கள் முன்னேற்றத்திற்காக பாடுபட்டவர், நமது மாண்புமிகு அம்மா அவர்கள்.*

அன்னை தெரசா அவர்களாலேயே பாராட்டப்பட்ட "தொட்டில் குழந்தைகள் திட்டம்", "பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்", "அங்கன்வாடி குழந்தைகளுக்கு வண்ணச் சீருடைகள்", பெண் கல்வியை ஊக்குவிக்க, படித்த பெண்களுக்கு "ஊக்கத் தொகையுடன்கூடிய தாலிக்குத் தங்கம்", அன்பும், அரவணைப்பும் கிடைக்கும்வண்ணம் "ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் முதியோர்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைத்தல்" போன்ற புதுமையான திட்டங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, மாண்புமிகு அம்மாவின் அரசால் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குழந்தைகளுக்காக, குறிப்பாக பெண் குழந்தைகளுக்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய உயர்ந்த சேவையினை நினைவுகூரத்தக்கவகையில், அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 24 ஆம் தேதியை, "மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளாக" (மேசையைத் தட்டும் ஒலி) அனுசரிக்க மாண்புமிகு

அம்மாவின் அரசு முடிவு செய்துள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவினைச் சிறப்பிக்கும்வகையில், ஆதரவற்ற பெண் குழந்தைகளின் நல்வாழ்விற்கான ஐந்து புதிய திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்த உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

1) அரசு இல்லங்களில் வாழும், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் இல்லாத குழந்தைகள், 21 வயதை நிறைவு செய்யும்போது, அவர்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் அவர்களது பெயரில் வங்கியில் செலுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அரசு இல்லங்களை விட்டு வெளியேறும் குழந்தைகள், சமுதாயத்தில் தங்கள் வாழ்க்கையை நிறைவாக அமைத்துக்கொள்ள இத்தொகை ஏதுவாக அமையும்.

2) பெற்றோர் மற்றும் பாதுகாவலர் இல்லாத பெண் குழந்தைகள், 18 வயது முடிந்து, அரசு குழந்தைகள் இல்லத்திலிருந்து வெளியே சென்ற பின்னர், அவர்களின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலைக்கு பாதிப்பு ஏற்படுமானால், மாண்புமிகு அம்மாவின் அரசு, தாய், தந்தை நிலையிலிருந்து அவர்களின் சமூக, பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்ய ஒரு சிறப்பு உதவித் தொகுப்பினை வழங்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த உதவித் தொகுப்பில் மேற்கல்வி பயிலுதல், திறன் மேம்பாட்டுப் பயிற்சி, வேலைவாய்ப்பு, சுயதொழில் செய்தல் போன்றவை அடங்கும். அப்பெண்களுக்கு 50 வயது நிறைவடையும் வரை இவ்வுதவி வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

3) தமிழ்நாட்டில் உள்ள பராமரிப்பு இல்லங்களில் ஆதரவற்ற மற்றும் முற்றிலும் கைவிடப்பட்ட குழந்தைகள், நல்ல குடும்பச் சூழ்நிலையில் வளர்வதற்கு, தகுந்த குடும்பங்களை அடையாளம் கண்டு, அக்குழந்தைகளை சிறந்த முறையில் வளர்ப்பதற்கும், பராமரிப்பதற்கும் வளர்ப்பு பெற்றோர்களுக்கு தற்போது 3 ஆண்டுகளுக்கு மாதம் ஒன்றுக்கு 2,000 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. இத்தொகை, மாதம் 4,000 ரூபாயாக *(மேசையைத் தட்டும் ஒலி)* உயர்த்தி 5 ஆண்டுகளுக்கு வளர்ப்பு பெற்றோர்களுக்கு வழங்கப்படும்.

4) பெண் சிசுக் கொலைகளைத் தடுத்திட தொட்டில் குழந்தைத் திட்டத்தினை நாட்டிலேயே முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில், பெண் சிசுக் கொலைகள் குறைந்து வரும் நிலையில், சில மாவட்டங்களில் மட்டும், குழந்தைகள் பாலின விகிதம் சராசரி பாலின விகிதத்தைக்காட்டிலும் குறைவாக உள்ளது. அதனைக் கருத்திற்கொண்டு, குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாகச் செயலாற்றும் மூன்று மாவட்ட நிருவாகங்களுக்கு முதல் மூன்று பரிசுகளாக தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–45

5) சமூகப் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் குழந்தைகள் இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பிற்காப்பு இல்லங்கள் மற்றும் மகளிர் காப்பகங்களில் உள்ள இல்லவாசிகளுக்கும், காப்பகங்களிலிருந்து பயிற்சி முடித்து வெளியேறிய இல்லவாசிகளுக்கும் சமூகப் பாதுகாப்புத் துறையில் ‘C’ மற்றும் ‘D’ பிரிவில் ஏற்படும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் எல்லைக்கு உட்படாத காலிப் பணியிடங்களில் பணியமர்த்த தற்போது அரசாணை உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களிலும் உள்ள முற்றிலும் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின்கீழ் இயங்கும் சமூக நலத் துறை, சமூகப் பாதுகாப்புத் துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகங்களில் ஏற்படும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் எல்லைக்கு உட்படாத ‘C’ மற்றும் ‘D’ பிரிவு பணியிடங்களில் வயது, கல்வி மற்றும் பிற தகுதிகளுக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்தப்படுவர். (மேசையைத் தட்டும் ஒலி)

இதைத் தவிர, சத்துணவுத் திட்டம் மற்றும் அங்கன்வாடி மையங்களில் உள்ள பணியிடங்களிலும் தகுதிக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்தப்படுவர் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)